# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்: SC- 68/2024

## வழக்கு சாட்சி:PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சக்திவேல் | தேதி : | 05.02.2025 |
| தந்தை பெயர்: | துரைசாமி நாடார் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரிஆஜர்)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 05,02.2025

**முதல் விசாரணை**

நான் அரமநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். கடந்த 10.04.2022 தேதி காலை சுமார் 11 மணியளவில் என் வீட்டு முன்பு நின்றுக்கொண்டிருக்கும்போது நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த கணபதிராமன் என்பவரையும் வழக்கின் விபரங்களை எடுத்துக்கூறி எங்கள் தெருவில் வசிக்கும் பொன்ராஜ் வீட்டின் பின்புறம் உள்ள பொத்தையடி மண் பாதையையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது அசாஆ.7 ஆகும். என்னுடன் சாட்சியாக பார்வைமகஜரில் முதலாவது சாட்சியாக கையொப்பமிட்டுள்ள நபர் கணபதிராமன். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். என் முன்பாகத்தான் காவல் ஆய்வாளர் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் அசாஆ.8 ஆகும். இது சம்பந்தமாக காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

பொன்ராஜ் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தூரத்து சொந்தம். பொன்ராஜ் அத்தை மகளை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஊர் அம்மன்கோவில் பிரச்சினை காரணமாக 2 தரப்பினர்களாக இருந்து வருகிறோம் என்றால் சரிதான். நானும், பொன்ராஜ்யும் ஒரே தரப்பில் இருக்கிறோம் என்றால் இருக்கலாம். நான் செங்கமால் வேலைக்கு பணகுடி சென்று வருகிறேன். செங்கமாலில் தினசரி போவதற்கு வருகை பதிவேடு இல்லை. நான் தினச்சம்பளத்திற்கு சென்று வருகிறேன். சம்பளம் வாங்குவதில் கையெழுத்து போடுவதில்லை. ஏதாவது கையெழுத்த போட்டு இருந்தால் வருகை பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எனக்கு தெரியாது. ஹைகிரவுண்ட் நான் செல்லவில்லை. ஆய்வாளர் என்ன காரில் வந்தார் என்றால் ஜீப்பில் வந்தார். என்ன ஜீப் என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் பெண்ணா ஆணா என்றால் ஆண். நான் வேலைக்கு காலை 7.30 மணிக்கு செல்வேன். அங்கு 9 மணிக்கு இருக்கவேண்டும். தினமும் நான் பைக்கில்தான் செய்வேன். நான் சம்பவம் நடந்த அன்று நான் ஊரில் இல்லை என்றாலும் வேலைக்கு சென்றிருந்தேன் என்றாலும் சரியல்ல. வட்ட ஆய்வாளர் இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தபோது நான் இருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. காவல் துறையால் ஏற்கனவே வரையப்பட்ட பார்வை மகஜரில் கையெழுத்து இட்டேன் என்றால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC- 68/2024**

**வழக்கு சாட்சி:PW6**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கணபதிராமன் | தேதி : | 05.02.2025 |
| தந்தை பெயர்: | சுடலைமாட நாடார் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 05.02.2025.

**முதல் விசாரணை**

நான் அரமநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். கடந்த 10.04.2022 தேதி காலை சுமார் 11 மணியளவில் என் வீட்டு முன்பு நின்றுக்கொண்டிருக்கும்போது நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த சக்திவேல் என்பவரையும் வழக்கின் விபரங்களை எடுத்துக்கூறி எங்கள் தெருவில் வசிக்கும் பொன்ராஜ் வீட்டின் பின்புறம் உள்ள பொத்தையடி மண் பாதையையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அது அசாஆ.9 ஆகும். என்னுடன் சாட்சியாக பார்வைமகஜரில் 2 வது சாட்சியாக கையொப்பமிட்டுள்ள நபர் சக்திவேல். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். என் முன்பாகத்தான் காவல் ஆய்வாளர் தயார் செய்தார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அசா1 பொன்ராஜ் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவினர் இல்லை. அசா1 பொன்ராஜ்-ன் தாத்தாவும் என்னுடைய தாத்தாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் இல்லை. என்னுடைய வீட்டிற்கும் அசா5 வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் தூரம் இருக்கும். நான் விவசாயம் செய்யும் இடத்திலுள்ள கிணறு கூந்தன்குளம் முதல் மூலைக்கரைப்பட்டி ரோட்டில் கிழக்கு புறமாக வயக்காட்டிற்கு நடுவே உள்ளது என்றால் சரிதான். நான் விவசாயம் பார்ப்பதற்காக கிணற்று பக்கம் போவேன் என்றால் சரிதான். நான் திரும்ப எப்போது வருவேன் என்றால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமயத்தில் வருவேன். ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட என்ன வாகனத்தில் வந்தார் என்றால் வாகனத்தை நான் கவனிக்கவில்லை. ஆய்வாளருடன் எத்தனை நபர்கள் வந்துள்ளார் என்றால் 3, 4 நபர்கள் வந்து இருப்பார்கள். ஆய்வாளர் பார்வை மகஜர் வரைந்து எத்தனை மணிக்கு கிளம்பினார் என்றால் எனக்கு தெரியாது. வந்தவுடன் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் வரைபடம் மற்றும் எழுதிவிட்டு வாங்கினார்கள். நான் சொன்னது போல் வரைபடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் வரைபடம் வரையவில்லை என்றாலும் சரியல்ல. அசா1 பொன்ராஜ் உறவினர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.